# 2025 TII குறியீடு

## (புகையிலை தொழில்துறை தலையீடுகளின் குறியீடு)

## (Tobacco Industry Interference Index)

### FACT SHEET

**புகையிலை கட்டுப்பாட்டுக்கான கட்டமைப்பு உடன்படிக்கை (FCTC)யில் பங்கேற்றுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் உறுப்பு நாடுகள், கட்டுரை 5.3 மற்றும் அதற்கான வழிகாட்டுதல்கள் மூலம், தங்களின் சுகாதாரக் கொள்கைகளை பாதுகாக்க வேண்டியது முக்கியமான பொறுப்பாகும். இந்தக் கட்டுரையின் மூலம் வணிக நலன்கள் மற்றும் பிற தனிப்பட்ட நலன்களின் தலையீடுகளிலிருந்து பொது சுகாதாரக் கொள்கைகளை பாதுகாப்பதற்காக உறுப்பு நாடுகளுக்கு அதிகாரமும் வழிகாட்டுதலும் வழங்கப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.**

## TII குறியீடு என்றால் என்ன?

2019ஆம் ஆண்டு தொடக்கம் TII குறியீடு கணிப்பிடப்படுகின்றது. அரசாங்கம் WHO, FCTC கொள்கையின் 5.3 பிரிவிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை எவ்வாறு செயற்படுத்துகின்றன என்பதை சிவில் சமூகங்கள் இணைந்து கண்காணிக்கும் குறியீடாகும்.

## TII குறியீட்டை தீர்மானிப்பதற்கான செயன்முறைகள்

கிழக்கு மெடிடரேனியன் பிராந்தியம், அமெரிக்கா, ஐரோப்பியா, தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் மேற்கு பசுபிக் கண்டம் ஆகியவற்றை சார்ந்த 100 நாடுகளில் 2025ஆம் ஆண்டிற்கான TII குறியீடு ஆய்வு செய்யப்பட்டது. 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கும் புகையிலை நிறுவனத்தின் தலையீடுகள் மற்றும் அவற்றிற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை மையப்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**"மதிப்பெண்கள் குறைதலானது வலுவான செயற்றிறன் அதிகரித்துள்ளமையைக் குறிக்கின்றது"**

5.3 பிரிவின் பரிந்துரைகளின் அடிப்படையில், தலையீடுகளை அடையாளங்கண்டு அவற்றிற்காக அரசாங்கம் என்கின்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், புகையிலை தொழில்துறை தலையீடுகளின் எண்ணிக்கை, மற்றும் அவற்றின் தீவிரத்தன்மையை அடையாளம் காண்பதற்கும் மற்றும் அவற்றின் கனதியை அளவிடுவதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வினாப்பத்திரம் மற்றும் புள்ளிகள் வழங்கும் பொறிமுறை பயன்படுத்தப்பட்டது.

## 2025ஆம் ஆண்டின் இலங்கைக்கான TII குறியீட்டின் பிரதான முடிவுகள்

1. 2025ஆம் ஆண்டு சர்வதேச TII குறியீட்டு கணக்கெடுப்பின் படி, இலங்கை 45ஆம் இடத்தில் உள்ளது
2. 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2025ஆம் ஆண்டின் நிலை 03 நிலைகளினால் பின்னடைவிற்குள்ளாகியுள்ளது. அதாவது இந்நிலைமையானது இலங்கையில் புகையிலை நிறுவனத்தின் தலையீடுகளின் அளவு அதிகரித்துள்ளது என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

FIGURE 1: TOBACCO INDUSTRY INTERFERENCE OVERALL COUNTRY RANKING




## இலங்கையில் TII குறியீட்டு நிலை குறைவடைந்தமைக்கான காரணங்களாக அமையும் புகையிலை நிறுவனத்தின் தலையீடுகள்.

- **நலன் மோதல்** (Conflict of Interest): அரச அதிகாரிகள் மற்றும் புகையிலை நிறுவனத்திற்கிடையில் நிலவிய உறவுகள்
  - உயர் அரச அதிகாரிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் புகையிலை நிறுவனத்தில் அங்கம் வகிக்கின்றமை. குறிப்பாக இயக்குநர் குழுவில் அங்கம் வகிக்கின்றமை.
  - உயர் அரச அதிகாரிகள் புகையிலை நிறுவனத்தினல் தலைமைத்துவ வகிப்பாகங்களை வகிக்கின்றமை அல்லது வகித்தமை
- **புகையிலை நிறுவனத்தின் சமூகப்பொறுப்பு (CSR) எனும் போர்வையில் நியாயமற்ற செயற்பாடுகளை பசுமை எனும் பெயரில் ஏமாற்றி தமது நிறுவனத்திற்கான விம்பத்தை ஏற்படுத்துகின்றமை.**

## இது போன்ற தொடர்ச்சியான சவால்களை முறியடிப்பதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு குறிப்பிடப்படுகின்றது. (எனினும் இவை கடந்த 2019ஆம் ஆண்டு தொடக்கம் தாமதமாக்கப்பட்டு வருகின்றமைக் குறிப்பிடத்தக்கது)

- புகையிலைப் பொருட்கள் மீதான முறையான மற்றும் விஞ்ஞான ரீதியான வரிக்கொள்கையை அமுல்படுத்தி புகையிலை நிறுவனத்திடமிருந்து வரிகளை சேகரித்தல்
- தனி சிகரட் விற்பனையை தடை செய்தல்
- கல்வி நிறுவகங்கள் மற்றும் சமய ஸ்தலங்களிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்கு புகையிலைப் பொருட்களின் விற்பனையை தடை செய்தல்
- NATA சட்டத்தை மீறுமிடத்து அவை குற்றச்செயல் என்பதை உறுதி செய்தல்
- NATA சட்டங்கள் மீறப்படுமிடத்து அவற்றிற்கு விதிக்கப்படும் தண்டப்பணத்தின் அளவை அதிகரித்தல்
- புகையிலை பயிர்ச்செய்கையை விடுத்து மாற்றுப் பயிர்ச்செய்கைக்கு மாற்றமடைவற்கு புகையிலை பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவித்தல்
- வெற்றுப்பொதியிடல் முறைமையை அமுல்படுத்தல்

## பரிந்துரை

வணிக நலன்களைவிட பொது சுகாதாரத்திற்கு முன்னுரிமை வழங்குவதற்காகவும், புகையிலை கட்டுப்பாட்டுக் கொள்கைகளை மேலும் தாமதமின்றி உருவாக்கி, அவற்றை திறம்பட அமுல்படுத்துவதற்கும், மேலும் கொள்கை உருவாக்கும் செயல்முறைகளின் போதும், பொது சுகாதாரத்தை பாதுகாக்கும் முயற்சிகளிலும் புகையிலைத்தொழில் துறை தலையீடுகளின் அனைத்து வடிவங்களையும் அடையாளம் கண்டு, அவற்றை சவாலுக்குட்படுத்தி, தடுத்து, நிறுத்துவதில் எச்சரிக்கையுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அனைத்து நலன்விரும்பிகளையும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் அன்புடன் எதிர்ப்பார்க்கின்றது.

Global TIII 2025 Report

Sri Lanka TIII 2025 Report

Source: Global Tobacco Industry Interference Index 2025 – Global Centre for Good Governance in Tobacco Control (GGTC), STOP (A Global Tobacco Industry Watchdog) and Asian Tobacco Industry Interference Index 2025 – Southeast Asia Tobacco Control Alliance (SEATCA)

ADIC
Alcohol and Drug Information Centre